பச்சகுப்பம் அருகே ரெயில்வே பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம்.

*வினா எண். 248—திரு. இல. பலராமன் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை—பெங்களூர் தேசீய நெடுஞ்சாலையில் ஆம்பூர் அருகே பச்சகுப்பம் என்னுமிடத்தில் ரெயில்பதையின் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது இப்பணி துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தேசிய நெடுஞ்சாலை 46, கி.மீ. 73/6-ல் பச்சகுப்பம் அருகே சாலை மேம்பாலம் அணுகு சாலைகளுடன் கட்டும் திட்டமானது மத்திய அரசால் 6-வது ஐந்தாண்டு திட்ட வேலைகளின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. 1982-83-ம் ஆண்டு திட்டத்தில் 2-வது கட்ட வேலையாக, நில உரிமை பெறும் பணிக்காக மத்திய அரசு ரூபாய் 21 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கியுள்ளது. 9-2-1983-ல் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

(ஆ) இக் கேள்வி தற்போது எழாது.

எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலைகள் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 249—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஜப்பானில் உள்ளதுபோல எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலைகள் அமைப்பது குறித்து பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் மேற்படி நெடுஞ்சாலையை உபயோகப்படுத்தும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இந்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்படும் சென்னை மாற்று வழியை எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலையாக அறிவிக்குமாறு இந்திய அரசிடம் கேட்கப்பட்டிருக்கிறது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளில் எக்ஸ்பிரஸ் வண்டிகள் ஓடுகின்ற போக்குவரத்து ரோடுகளில் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக, போக்குவரத்து விதிகளுக்கு புறம்பாக நடக்கின்ற, பொதுமக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. அத்தோடு, எக்ஸ்பிரஸ் வண்டிகளின் டிரைவர்கள் போக்குவரத்து

1983 பிப்ரவரி 12]

விதிகளை மீறினால் அவர்களுடைய லைசன்ஸ் பறிக்கப்படுகிறது. அதேபோன்ற நடவடிக்கைகளை இங்கேயும் எடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. என்றாலும், அதுபோன்ற விதி முறைகள் இப்போது ஏற்கனவே நடைமுறையிலே இருந்தாலும், நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்திற்கு இடைஞ்சல் செய்கிற வகையில் சாலைகளில் குழி தோண்டி வரவேற்பு வளைவுகள் போன்றவைகள் அமைக்கின்ற காரணத்தால், ரோடுகளில் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுகின்றன. அத்தோடு சிலர் ரோடு ஓரங்களில் உள்ள பிளாட்பாரங்களில் ஆக்கிரமிப்பு செய்வதால், ரோடிலே நடக்க முடியாமலும், ரோட்டை கடக்க முடியாமலும் சூழ்நிலை இருக்கின்றதே. ஆகவே அவை எல்லாம் அப்புறப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைகளில் எங்கே வரவேற்பு வளைவுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், அவைகள் எல்லாம் அரசியல் கட்சிகளினால்தான் ஏற்படுத்தப்படுகின்றன. இந்த மாமன்றத்தின் மூலமாக அவர்களை வேண்டிக் கொள்கிறேன், தயவுசெய்து இப்படிப்பட்ட சாலைகளில் எல்லாம் பழுது ஏற்படுகின்ற வகையிலே வளைவுகள் போடவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆக்கிரமிப்புச் செய்கிறவர்களை அகற்றுவதற்குரிய விதிமுறைகள் எல்லாம் நெடுஞ்சாலைத் துறையின் சட்டதிட்டங்களிலே இருக்கின்றன. ஆகவே, ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்.

(முற்பகல் 9-20)

திரு. எம். சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத்துறையின் சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புக்கள் அகற்றப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் முதலிலே அப்படி அகற்றப்பட்ட பிறகு இரண்டு அல்லது மூன்று மாதங்கள் கழித்து மீண்டும் அவ்வாறு போடுகிறார்கள். ஆகவே அவ்வாறு ஆக்கிரமிப்புகள் செய்யப் படாமல் இருக்கின்ற வகையிலே நிரந்தரமான சட்டம் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு நிரந்தரமாகச் செய்யவேண்டும் என்றால் எல்லோருக்கும் இருக்க இடம், உண்ண உணவு, உடுக்க உடை கிடைத்துவிட்டால் கண்டிப்பாக ஆக்கிரமிப்புக்கள் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1983 பிப்ரவரி 12

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவரவர்களே, நெஞ்சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புக்கள் அகற்றப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு நன்றி. ஆனால் அப்படிப்பட்ட வேலை தொடர்ந்து நடக்கவேண்டும், எல்லா இடங்களிலும் இருக்கவேண்டும், கட்சிப் பாகுபாடற்ற முறையில் இருக்கவேண்டும் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா? வரவேற்பு வளைவுகள் என்று நகர்ப்புறங்களில் உள்ள நெடுஞ் சாலைகளில் ஆண்டுக்கு பத்து, பன்னிரண்டு முறை அவ்வாறு அமைக்கப்படுகின்றன. எனவே நிரந்தரமாக அமைக்காமல் இருக்க அரசு ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். கட்சிக்காரர்கள் அவ்வாறு வரவேற்பு வளைவுகள் போட்டுவிடுகிறார்கள். மேலும் அவர்கள் அதற்காக அனுமதியும் கூடப் பெறுவதில்லை. இரவோடு இரவாக அவ்வாறு செய்துவிடுகிறார்கள். ஆனால் அந்த வளைவுகளை எடுத்துச் செல்கின்ற நேரத்தில் சாலை பழுதாகி இருக்கின்றதா என்பதைப் பார்ப்பதில்லை. அதனால்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. தற்போது நெடுஞ்சாலைத் துறையில் உள்ள சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. திரு. பூங்காவனம் அவர்களுக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய திரு. பழனிவேல் அவர்கள் நேற்று முன்தினம் என்னிடம் கேட்டார்கள், பழனியிலே உள்ள ஆக்கிரமிப்புக்கள் அகற்றப்படுவது பற்றி. அங்கே மருத்துவ மனைக்கு முன்னாலே ஏறத்தாழ நூற்றுக்கு மேற்பட்ட கடைகள் போடப்பட்டிருந்தன. அவற்றை அகற்றவேண்டும் என்று உடனடியாக உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. ஆனால் அவர் வந்து அகற்றவேண்டாம் என்று சொன்னார்கள். எனவே தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய நண்பருக்கு இருக்கின்ற நிலைமைகளை எடுத்துச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, நெடுஞ் சாலைத் துறைக்குச் சொந்தமான இடங்களில் இருக்கின்ற ஆக்கிரமிப்புக்கள் அகற்றப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதிக்குப் பக்கத்தில் நன்னிலத்தில் நெடுஞ் சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் ஒரு தனியார் நிரந் தரமான கட்டிடம் கட்டுகிறார்கள். நெடுஞ்சாலைத் துறையினைச் சேர்ந்தவர்கள் அது குறித்து நோட்டீஸ் கொடுத்தும் அது அப்புறப்படுத்தப்படவில்லை. மேலும் காவல் துறையிலேயும் அது குறித்து ரிப்போர்ட் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அப்படி இருந்தும் நடவடிக்கை எடுக்கப்படாமல் அந்தக் கட்டிடம் தொடர்ந்து கட்டப்பட்டு வருகின்றது. எனவே அதனைக் காலி செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

1983 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். விவசாய சங்கத்தினைச் சேர்ந்தவர்கள் அனுமதி இல்லாமல் ஒட்டன்சத்திரத்தில் கட்டிடம் கட்டினார்கள். அதுகுறித்து நோட்டீஸ் கொடுக்கப்பட்டும் அவர்கள் அதை அகற்ற மறுத்தார்கள். கடைசியாக ஓர் இரவிலே அது அகற்றப்பட்டது என்பது நமக்குத் தெரியும். அதேபோன்ற நிலைமையினை இதற்கும் கூட அனுசரிக்கலாம்.

பட்டினிச்சாவு தடுப்பு திட்டத்தின் மூலம் நிவாரணம் பெற்றோர் எண்ணிக்கை

* வினா எண் 250—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டினிச் சாவு தடுப்பு திட்டத்தின் மூலம் 1981 முடிய எத்தனை பேர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது?

(ஆ) இத்திட்டத்தின் மூலம் எத்தனை பேர் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பயன் அடைந்தார்கள்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 268 நபர்கள் (1981 டிசம்பர் முடிய) (ஆ) 12 நபர்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலம் நிவாரணம் பெற என்னென்ன நடைமுறைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு எவ்வளவு பேருக்கு நிவாரணம் வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1980-ஆம் ஆண்டு டிசம்பரிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலமாக ஏழை எளியவர்கள், வாழ வழி ஏதுமின்றி பட்டினியால் மிகவும் வாடும் நிலைமை ஏற்பட்டால் அத்தகையோர் ஊர்நல அலுவலரை அணுகி ரூபாய் 100 உதவித் தொகையாகப் பெறலாம். அத்தகையோர் அவ்வாறு பணம் பெற்ற பின்னர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் வேலைக்கு சேர்த்துக்கொள்ளப்படுவர். வயதானவர்களாக இருந்து முதியோர் உதவித்தொகை பெறத் தகுதி உடையவர்களாக இருந்தால் அவர்களுக்கு அந்த உதவித்தொகையினைப் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நல்ல முறையில் செயலாற்றப்படவேண்டும் என்றால் இதற்கு ஊர்நல அலுவலர்கள் மட்டுமல்லாமல் மேலும் தனியாக அலுவலர்களைப் போட்டு அவர்கள் மூலமாக இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தத் திட்டத்தை ஊர்நல அலுவலர்தான் செய்து வருகின்றார்.